# நாட்டைச் சீரழித்து நாசமாக்கிய ராஜபக்ஷக்களை தூக்கிலிட வேண்டும்; சரத் பொன்சேகா ஆவேசம்!

யுத்த வெற்றி நாயகர்கள் எனும் மகுடத்தைச் சூடிக்கொள்ள ராஜபக்சக்களுக்கு எந்த அருகதை யும் கிடையாது, என நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் பெரும் குற்றவாளிகளான ராஜபக்சக்களைப் பாதுகாப்பதற்காகவே ரணில் விக்ரமசிங்க முயற்சிக்கிறார், என அவர் குற்றம் சாட்டியுள்ளார். கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றியின் பின்னர், ராஜபக்சக்கள் தங்கள் சுகபோக அரசியல் நலன்களுக்காக இந்த நாட்டின் வளங்களை விற்று, அரச சொத்துக்களைக் கொள்ளையடித்ததோடு நாட்டையே நாசமாக்கினார்கள். இவ்வாறு நாசகாரச் செயல் புரிந்த ராஜபக்சக்களை மக்கள் முன்னிலையிலேயே கூண்டோடு தூக்கிலிட வேண்டும், என அவர் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்திற்குத் தலைமை தாங்கியவன் என்ற ரீதியிலும், முன்னாள் இராணுவத் தளபதி என்ற ரீதியிலும் இதை வெளிப்படையாகக் கூற எனக்கு உரிமை உண்டு எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டை விற்ற ராஜபக்சக்களின் மோசமான செயல்களுக்கு மக்கள் அவர்களைக் கூண்டோடு அதிகாரத்திலிருந்து துரத்தியடித்தார்கள். இருப்பினும் அந்தத் தண்டனைகள் அவர்களுக்குப் போதாது. இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அவர்களைப் பாதுகாப்பதற்காக தேர்தல்களை நடத்தப் பயப்படுகிறார்.

தேசிய ரீதியில் தேர்தல் ஒன்று நடந்தால் ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சிக்கு வரும். அவ்வாறு நடந்தால் ராஜபக்சக்களுக்கும் தனக்கும் அது பாதகமாக அமையும் என ரணில் பயப்படுகின்றார், எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 13 செவ்வாய்க்கிழமை 27.06.2023 கதிர் 12



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# ஒட்டுமொத்த தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு!

## ஜனாதிபதி ரணில் உறுதி



**வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் மாத்திரமின்றி மலையகத்தில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

**தமது பிரான்ஸ் விஜயத்தின் போது 'பிரான்ஸ் 24' செய்திச் சேவையிடம் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.**

**இந்திய வம்சாவளிகளான மலையக மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக திடீரென நுவரெலியா மாவட்டத்தில் பெரும்பான்மையாக இருந்த சிங்கள மக்கள் அங்கு சிறுபான்மையினராகியுள்ளனர்.**

**அந்தத் தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் அவர்களது சமூக முன்னேற்றம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர்களால் அரசியலில் ஈடுபட முடிந்துள்ளதோடு, அரசின் அமைச்சரவையிலும் அங்கம் வகிக்கின்றனர்.**

**வடக்கு மாகாணத்தில் உள்ள அரசியல் தலைவர்களும் மக்களும் அரசமைப்பில் உள்ள அதிகாரப் பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்துமாறு கோருகின்றனர். அரசமைப்பில் உள்ள விடயங்கள் தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த விடயத்தில் அரசு எந்த விதத்திலும் தலையிடப் போவதில்லை. அதற்கான உத்தரவாதமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.**

**அத்துடன் ஏனைய சில அதிகாரங்களும் கோரப்படுகின்ற நிலையில் அந்த விடயம் குறித்து கலந்துரையாடப்படுகின்றது, என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.**

## அமைச்சரவைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி அவசர அழைப்பு!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்படி நாளை புதன்கிழமை அமைச்சரவை கூடவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு அமைச்சர்களுக்குப் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்புத் தொடர்பான சட்டமூலத்துக்கு இதன்போது அனுமதி பெறப்படவுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நாடாளுமன்றமும் எதிர்வரும் சனிக்கிழமை கூடவுள்ளது.

## தியகல மஸ்கெலியா பிரதான வீதியில் மழையால் பாரிய மண் திட்டுச் சரிவு



*மஸ்கெலியா நோட்டன், கினிகத்தேன பகுதியில் உள்ள தியகல சந்தியில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் பாரிய மண் திட்டுச் சரிவு ஏற்பட்டுள்ளது.*

*இதனால், கினிகத்தேன கொழும்பு வழியாக ஹட்டன் மஸ்கெலியா நோட்டன் வரும் வாகனங்கள் தற்காலிகமாக மாற்று வழியைப் பயன்படுத்துமாறு கினிகத்தேன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*குறித்த பகுதியில், காலை 10.30 மணியளவில் பெய்த மழையால் இந்த மண் திட்டுச் சரிவு ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் மேலும் மண் சரிவுகள் ஏற்படும் அபாயமும் உள்ளது.*

*சரிந்த மண் திட்டை அகற்ற நோர்வூட் பிரதேச வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் வேலைகளை முன்னெடுத்துள்ளனர்.*

## மத சுதந்திரத்தை பாதுகாக்கக் குழு

மதச் சுதந்திரத்தைப் பறித்தல் மற்றும் சமயக் கருத்துக்களைத் திரிபுபடுத்துதல் போன்றவற்றை ஆராய்வதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பௌத்த, இந்து, முஸ்லிம், கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள், சட்ட வல்லுநர்கள், ஊடகங்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கொண்ட குழுவை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், மத போதனைகளை அவதூறு செய்வதைத் தடுக்கவும் சட்ட விதிகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் குழு நியமிக்கப்படுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருக்கிறது.

## கட்சித் தலைவர்கள் கூட்டம் வெள்ளி வரை ஒத்திவைப்பு

நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் இன்று நடைபெறவிருந்த நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 க்குச் சபாநாயகரின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. .

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான பிரேரணைகளுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறும் நோக்கில், எதிர்வரும் சனிக்கிழமை நாடாளுமன்றச் சபை நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் இதன்போது தீர்மானம் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## சட்டமா அதிபர், நிதி அமைச்சின் செயலர் முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனைகளை இன்று நிராகரித்தது உயர் நீதிமன்றம்

2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மனுக்களை நிராகரிக்குமாறு கோரி, சட்டமா அதிபர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளரால் தாக்கல் செய்யப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனைகள் இன்று உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன.

2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவது பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்பதை உறுதிப்படுத்தும் நீதிமன்ற உத்தரவை இரண்டு அடிப்படை உரிமை மனுக்களும் கோரியிருந்தன.

புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ மற்றும் காமினி அமரசேகர ஆகிய ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி மற்றும் சுதந்திரமான மற்றும் 2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் புதிய நிர்வாகத்தினர் தெரிவுசெய்யப்பட்டனர்




வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் வருடாந்த ஒன்று கூடல் நேற்று ஞாயிறு மாலை ஆறு மணியளவில் றில்கோ சிற்றி ஹொட்டலில் நடைபெற்றது.

வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் என்பது வடமாகாணத்தில் உள்ள சுற்றுலா விடுதிகளின் உரிமையாளர்கள் மற்றும் சுற்றுலாத்துறையோடு தொடர்புபட்ட ஏனைய அமைப்புக்களையும் இணைத்து செயற்படுகின்ற ஒரு பொது அமைப்பாகும்.

யாழ்ப்பாணம் யாழ்பாடியின் உரிமையாளர் திரு சுந்தரேசனால் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக, பெரும்பாலும் உல்லாச விடுதி உரிமையாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

இதன் புதிய நிர்வாகத்தெரிவும் நேற்று இடம்பெற்றது. இதன் புதிய தலைவராக கொசி ஹொட்டல் உரிமையாளர் திரு சு.சுதர்சனும், மை பீஸா உரிமையாளர் திரு.கார்த்திக் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். புதிய நிர்வாகம், தாம் ஆற்றப் போகின்ற பணிகள் தொடர்பான விடயங்களை செயற்றிட்ட அறிக்கையாக சமர்ப்பித்திருந்தனர்.

வடமாகாண சுற்றுலாத்துறையினை வளமான சுற்றுலாத்துறையாக மேம்படுத்துவதுடன் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி, இளைஞர் யுவதிகளை இணைத்துக் கொள்வதும் இவர்களது பிரதான பணியாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

# யாழ் போதனாவில் இலவச கண்புரை சத்திரசிகிச்சை

யாழ் போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு, அவர்களுக்கான கண்புரை சத்திர சிகிச்சையினை கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவன் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த இலவச கண்புரை சத்திரசிகிச்சைத் திட்டமானது ஐக்கிய இராச்சியத்தின் அசிஸ்ற் ஆர்ஆர் நிறுவனத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தில், கரவெட்டிப் பிரதேச செயலகப்பிரிவில்வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டிய நோயாளர்களைக் கண்டறியும்இறுதிக்கட்ட இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 9 மணி தொடக்கம் உடுப்பிட்டி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை குறித்த தினத்திலேயே சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைக் கண்டறியும் இலவச மருத்துவ முகாம் காலை 9 மணி தொடக்கம் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# விசுவமடு மக்கள் வங்கிக் கிளை புதிய கட்டடத்தில் திறந்துவைப்பு



நீண்ட காலமாக பரந்தன் மக்கள் வங்கியின் ஒரு பகுதி நேரக்கிளையாக இயங்கிவந்த விசுவமடு மக்கள் வங்கிக் கிளையானது, விசுவமடு பத்தாம் கட்டைப்பகுதியில் புதிய கட்டிடத்தில் தமது கிளை நடைவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இன்று காலை சமய அனுஸ்டானங்களுடன் இந்தக் கிளையின் சம்பிரதாயபூர்வ ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

# கொழும்புத் துறைமுக நகரத்தில் 1.2 பில்லியன் முதலீடு செய்யும் சீனா

கொழும்புத் துறைமுக நகரத்தில் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவுள்ளதாக சீன துறைமுக பொறியியல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இன்று பீஜிங்கில், இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி மற்றும் சீன துறைமுக பொறியியல் அமைப்பின் தலைவர் பாய் யின்ஷான் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

# குருதிக் கொடையாளர் கௌரவிப்பு யாழில் இன்று விசேட நிகழ்வு

குருதிக் கொடையாளிகளையும் குருதிக் கொடை முகாமை ஒழுங்குபடுத்துபவர்களையும் கௌரவிக்கும் விசேட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் இடம்பெற்றது.

100 குருதிக்கொடையாளர்களுக்கும் 50 குருதிக் கொடை முகாமை ஒழுங்குபடுத்துபவர்களுக்கும் இதன்போது கௌரவமளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிராந்திய இரத்த வங்கி ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வு யாழ்ப்பாணம் தாதியியல் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலை அதிகாரிகள், இரத்த வங்கி உத்தியோகத்தர்கள், தேசிய குருதிமாற்று பிரயோக சேவையினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு குருதிக் கொடையாளருக்கு கௌரவம் வழங்கினர்.

உலக குருதிக் கொடையாளர் தினம் ஜூன் 14 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் அனுஸ்டிக்கப்பட்டு வருகிறது.

# சமுர்த்திப் பதிவுகளில் முறைகேடு மேல்முறையீடு செய்ய அவகாசம்

யாழ் மாவட்டத்தில் சமுர்த்திப் பதிவுகளில் ஏதாவது முறைகேடு இடம்பெற்றிருந்தால், தங்களுடைய மேன்முறையீடுகளை ஜூலை 10 ஆம் திகதி வரை அனுப்பி வைக்க முடியும் எனவும், அந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடைய தேவையில்லை எனவும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

சமுர்த்திப் பதிவுகளில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து நேற்றைய தினம் யாழ் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பொதுமக்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பில் அரச அதிபரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

குறித்த சமுர்த்தித் தெரிவில் ஏதாவது முறைகேடு இடம் பெற்றிருந்தால் எதிர்வரும் ஜூலை மாதம் பத்தாம் திகதி வரை தங்களுடைய மேன்முறையீடுகளை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க முடியும், அந்த மேல்முறையீடுகள் பரிசீலனை செய்யப்பட்டு அவற்றுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனவே இது தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்

# ஓட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள் இயக்க முயற்சி!

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள உருவாக்கம் செய்து, குறித்த தொழிற்சாலையினை மீள இயங்க வைப்பது தொடர்பாக ஆராய்வதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனும், நிபுணத்துவ குழுவினரும் இன்றைய தினம் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், அரசியலைத் தாண்டி எமது இளைஞர் யுவதிகளது வேலைவாய்ப்புத் தொடர்பில் சிந்திக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

அதன் அடிப்படையில் இந்தப் பிரதேச மக்கள் இந்த ஓட்டுத் தொழிற்சாலை இயங்குவதன் மூலம் தமக்கான வேலைவாய்ப்புக் கிடைக்கும் என நம்புகின்றார்கள்.

இன்றைய தினம் 3 இயந்திரவியல் பொறியியலாளர்கள் ஒரு குடிசார் பொறியிலாளர், ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி உட்பட்ட நிபுணத்துவ குழுவுடன் அங்கு சென்று கலந்துரையாடயுள்ளோம். குறித்த தொழிற்சாலை அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற நிலையில் இதற்கான சாத்தியக்கூற்று அறிக்கை ஒன்றை வரைந்து கைத்தொழில் அமைச்சருடன் கலந்துரையாட இருக்கின்றோம்.

பாரிய செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. மிகவும் எளிதாக இதனை இயங்க வைக்க முடியும். இதன் மூலம் வடக்கின் பொருளாதார வளர்ச்சிக்கும் வேலை வாய்பிற்கும் பாரிய பங்களிப்பினை இது ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

# சட்டமா அதிபர், நிதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பு ஆகியவற்றால் குறித்த இரண்டு அடிபடை உரிமை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்களின் விசாரணையின்போது பூர்வாங்க ஆட்சேபனைகளை எழுப்பி, சட்டமா அதிபர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோர் சம்பந்தப்பட்ட மனுக்களைத் தள்ளுபடி செய்யுமாறு கோரியிருந்தனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட -
maalaikkathir@gmail.com

# வெள்ளி, ஞாயிறுகளில் தனியார் வகுப்புகளுக்குத் தடை மீள் பரிசீலனை செய்யுமாறு யாழ் வணிகர் கழகம் கடிதம்

வெள்ளி, ஞாயிறு தினங்களில் தரம் 1 முதல் 9 வரை தனியார் வகுப்புகளுக்குத் தடைவிதிக்கப்பட்டதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என யாழ் வணிகர் கழகம், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாதசுந்தரனுக்கு கடிதம் எழுதியுள்ளது.

அக்கடிதத்தில் - வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புக்குத் தடைவிதிக்கப்பட்டதை மறு பரிசீலனை செய்ய வேண்டும். தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கையானது தற்போதைய காலகட்டத்தில் பொருத்தமற்றதாக அமையுமென நாம் கருதுகிறோம். அதற்கான சில விபரமான காரணங்களைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

1) கடந்த போர்ச் சூழல் காரணமாக தமிழ் மக்களினுடைய கல்வித்தரம் வெகுவாகக் குறைந்துள்ளது. அதாவது, இலங்கையில் மாகாண அடிப்படையில் எமது மாகாணம் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் 8 அல்லது 9 வது நிலையில் உள்ளது. அதனை ஈடு செய்ய வேண்டிய பொறுப்பு எம்க்குள்ளது.

2) கொரோனா பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட முடக்கநிலை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பாடசாலைகளில் பாடத்திட்டம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. அத்துடன் வழமையாக நடைபெறும் பரீட்சைகளும் பின் தள்ளப்பட்டுச்செல்கின்றன. மேலும், கூடுதலாக தனியார் கல்வி நிலையங்களிலே இப்பாடத்திட்டங்கள் முடிந்தளவு கவனத்தில் எடுத்துக் கற்பிக்கப்படுகின்றது.

3) தொழில் நிமித்தம் வேலைக்குச் செல்லும் பெறறோர் பிள்ளைகளின் கல்விக்காக சனி, ஞாயிறு தினங்களையே தனியார் கல்வி நிலையங்களுக்குக் கூட்டிச் செல்வது பொருத்தமாக அமையுமென கருதுகின்றனர்.

4) வெள்ளி,ஞாயிறு தினங்களில் மதவழிபாடு, அறநெறி கற்றல் என்பது கட்டாயமாக்கப்பட்டதாக காணப்படவில்லை. மாணவர்கள் மதவழிபாடு, அறநெறிக்குச் செல்வார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

5) மேலும், இந்த தடை விதிக்கப்பட்ட காலங்களில் இடைவிலகிய மாணவர்களுடன் இவர்களும் இணைந்து பாதிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அத்துடன் இவர்கள் விடுமுறை நாட்களில் சமூகத்தில் இருக்கும் சில சமூகச் சீர்கேடுகளில் இணையும் வாய்ப்புக்கள் அதிகம் ஏற்படலாம்.

(6) ஏழை, நடுத்தர மாணவர்கள் பயன்பெறும் தனியார் பயிற்சிக்கல்வி வெள்ளி, ஞாயிறு தினங்களில் தடைசெய்யப்பட்டால் அவர்களுடைய கல்வி பாதிக்கப்படும். அதேவேளை வசதி படைத்த மாணவர்கள் தனிப்பட்ட வகுப்புக்களுக்குச் சென்று பயனடைவர்.

7) பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களே தனியார் கல்வி நிலையங்களிலும் வகுப்புக்களை நடாத்துவதால் அவர்களுக்கு விடுமுறை நாட்கள் வசதியாக அமையும்.


8) இந்தத் தடை அமுலுக்கு வருமாக இருந்தால் கல்விச்செயற்பாடுகளில் மேலும் பின்னடைவு ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் நிறையவே உள்ளன. அத்துடன் எமது செயற்பாடுகள் பின்நோக்கிச் செல்வதற்கு நாமே வாய்ப்பினை ஏற்படுத்தியவர்களாக விளங்குவோம்.

9) கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு இலங்கை அரச அமைச்சரவையில் அப்போதிருந்த கல்வியமைச்சரால் வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகள் தடைசெய்ய வேண்டுமென்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது அமைச்சரவையில் பாரிய எதிர்ப்புக் கிளம்பியதையடுத்து இந்த விடயம் கைவிடப்பட்டதாக நாம் அறிகிறோம்.

மேலும், இலங்கையில் எந்த மாகாணத்திலும் இப்படியான நடைமுறைகள் இல்லாதபோது நாம் மட்டும் இதை ஏற்படுத்துவது எமது மாகாணக் கல்விப் பின்னடைவுக்கு - வழிவகுப்பதாக அமையும் என்று நாம் கருதுகிறோம்.

ஆகவே, மேற்குறிப்பிட்ட ஒன்பது விடயங்களை தங்கள் கவனத்தில் எடுத்து தாங்கள் மேற்கொண்ட தீர்மானத்தினை மறுபரிசீலனை செய்து கல்விச் செயற்பாடுகளுக்கு எந்த வித தடைகளையும் ஏற்படுத்தாது கல்வி வளர்ச்சிக்கு தாங்கள் பூரண ஆதரவினை வழங்கியுதவுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அதேவேளை தனியார் கல்வி நிலையங்களில், சுகாதார உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும், மாணவர்களுக்கு சமய சம்பந்தமாகவும், ஒழுக்கக்கல்வி, மற்றும் சமூகம் சம்பந்தமாகவும் 15 நிமிடம் தொடக்கம் 30 நிமிடம் வரை கற்பிக்க வேண்டும் என்று தாங்கள் எடுத்த தீர்மானத்தினை நாம் வரவேற்கின்றோம் - என்றுள்ளது.



YARL VANEGAR KALAGAM
JAFFNA CHAMBER OF COMMERCE
Regd. No. GA 2601 Under Companies Act No. 7 of 2007
யாழ் வணிகர் கழகம்

No. 165, Manipay Road,
Jaffna, Srilanka.
T.P.No. 021 - 222 2567, 8593
Fax No. 021 - 222 2567
E.mail:- jaffnachamberofcommerce@gmail.com

16.06.2023

அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

ஐயா!

வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புக்குத் தடைவிதிக்கப்பட்டதை மறுபரிசீலனை செய்தல் தொடர்பானது.

மேற்படி விடயம் தொடர்பாக, தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கையானது தற்போதைய காலகட்டத்தில் பொருத்தமற்றதாக அமையுமென நாம் கருதுகிறோம். அதற்கான சில விபரமான காரணங்களை தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

1) கடந்த போர் காரணமாக தமிழ் மக்களினுடைய கல்வித்தரம் வெகுவாகக் குறைந்துள்ளது. அதாவது இலங்கையில் மாகாண அடிப்படையில் எமது மாகாணம் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் 8அல்லது 9வது நிலையில் உள்ளது. அதனை ஈடு செய்ய வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

2) கொரோனா பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட முடக்கநிலை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பாடசாலைகளில் பாடத்திட்டம் (Syllabus) முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. அத்துடன் வழமையாக நடைபெறும் பரீட்சைகளும் பின் தள்ளப்பட்டுச்செல்கிறது. மேலும் கூடுதலாக தனியார் கல்வி நிலையங்களிலே இப்பாடத்திட்டங்கள் (Syllabus) முடிந்தளவு கவனத்தில் எடுத்து கற்பிக்கப்படுகின்றது.

## யாழ் மாநகர சபையின் நடமாடும் சேவை தொடர்பான அறிவிப்பு

யாழ் மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள என்.எஸ்.ஆர் திருமண மண்டப நுழைவாயிலில் நடைபெறவுள்ளது.

இதில், 14 மற்றும் 15 ஆம் வட்டாரங்களுக்கான ஆதனவரி அறிவித்தல் படிவம் அல்லது சோலை வரி வழங்கல், பெயர்மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன், பொதுமக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள், நடப்பாண்டு ஆதனவரி போன்றவற்றைப் பெற்று யாழ் மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நடப்பாண்டின் ஆதனவரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியில் 5 சதவீத கழிவினைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி சேவைச்சந்தையில் அதிகரித்த இட வாடகை வடக்கு மாகாண ஆளுநரிடம் முறைப்பாடு தெரிவிப்பு



கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில், கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர்களிடம் அதிகரித்த இட வாடகைக் கட்டணம் அறவிடப்படுவதாக, வர்த்தகர்களாலும் சேவைச்சந்தை வர்த்தக அபிவிருத்திச் சங்கத்தினராலும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் இராஜபாலன் புவனேஸ்வரன், உபதலைவர் கறுப்பையா ஜெயக்குமார், உறுப்பினர் அருளானந்தம் யேசுராஜன் உள்ளிட்டோர் நேற்றைய தினம் வடக்குமாகாண ஆளுநரை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது, புதிய மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையிலான கட்டண அறவீட்டினால் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைச் சுட்டிக்காட்டி, அதனைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து, உரிய திணைக்களங்களோடு கலந்துரையாடி, கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர்கள் பாதிக்கப்படாத வகையிலான தீர்வைப் பெற்றுத்தருவதாக வடக்கு மாகாண ஆளுநர் பீ.எச்.எம்.சாள்ஸ் உறுதியளித்திருக்கிறார்.

## ஆளும் கட்சி எம்.பிக்களை நாளை சந்திக்கிறார் ரணில்



ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் மாலை 5 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவே இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுபோக அறுவடை நெல்லை நல்ல விலைக்கு விற்பனை செய்ய விவசாயிகள் திண்டாட்டம்

2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற் செய்கை அக்கரையான், ஸ்கந்தபுரம், கோணாவில் போன்ற பகுதிகளில் சிறுபோக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அறுவடை செய்த நெல்லை நியாயமற்ற விலையில் தமக்கு விற்பனை செய்யுமாறு தனியார் நெல் கொள்வனவாளர்கள் கேட்பதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.



தற்போது நான்காயிரத்து 4200 ரூபா தொடக்கம் 3500 ரூபா வரையான விலைகளிலே நெல் கொள்வனவு இடம்பெறுவதாகவும், இவ்வாறு நெல் கொள்வனவு நடைபெற்றால் தமது நிலை படு பாதாளத்திற்குச் செல்ல நேரிடும் என்றும் அவர்கள் பிரஸ்தாபிக்கின்றனர்.

நெற்செய்கையை மேற்கொண்டு அறுவடை செய்யும் வரையான காலப் பகுதியில் ஏக்கர் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபா முதல், ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா வரை செலவாகின்றது. இருப்பினும் அறுவடை செய்த நெல்லை ஒரு லட்சம் ரூபாய்க்கு கூட விற்பனை செய்ய முடியாத நிலையில் நாங்கள் இருக்கிறோம்.

எனவே, அரசாங்கத்தினால் உரிய விலையில், விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத நிலையில் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும் என விவசாயிகள் கோரியுள்ளனர்.

# உள்நாட்டுக் கிளர்ச்சி தோல்வியில்தான் முடியும் வாக்னர் படை பற்றி ரஷ்ய அதிபர் புடின் கருத்து



உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரில் வாக்னர் குழு என்ற தனியார் கூலிப்படையும் இணைந்து செயல்பட்டது. இந்தப் படைக்கும் ரஷ்ய இராணுவத் தரப்புக்குமிடையே ஏற்பட்ட முறுகல், உள்நாட்டு யுத்தத்துக்கு வழிவகுக்கும் நிலை காணப்பட்டது. பின்னர், பெலாரஸ் நாட்டு அதிபரின் தலையீட்டினால் சமரசம் மேற்கொள்ளப்பட்டது.

ரஷ்யாவுக்கு எதிரான தனியார் படையின் கிளர்ச்சி 24 மணி நேரத்தில் முடிவுக்கு வந்துவிட்டாலும், ரஷ்யா - உக்ரைன் போரில் அடுத்து என்ன நடக்கும் என்ற கேள்வி எழுந்திருக்கிறது. இந்தச் சம்பவம் அதிபர் புடினுக்குப் பின்னடைவாக இருக்கும் என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

வாக்னர் படையின் கிளர்ச்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கருத்துத் தெரிவிக்கும்போது, ரஷ்யாவில் உள்நாட்டுக் கிளர்ச்சி உருவானால் அது தோல்வியில் தான் முடியும். ரஷ்ய ராணுவ வீரர்கள் ஒருவரை ஒருவர் கொல்ல வேண்டும் என மேற்கு நாடுகள் விரும்புகின்றன. வாக்னர் படையை வீழ்த்த உறுதுணையாக இருந்த ரஷ்ய மக்களுக்கு நன்றி.

வாக்னர் படை ரஷ்ய ராணுவத்தில் இணையலாம் அல்லது பெலாரஸ் நாட்டிற்குச் செல்லலாம். ரஷ்யாவில் ரத்தம் சிந்துவதைத் தவிர்க்க இறங்கிய வாக்னர் கூலிப்படைப் போராளிகள் மற்றும் தளபதிகளுக்கு நன்றி. வாக்னர் போராளிகள் விரும்பினால் பெலாரசுக்கு இடம்பெயர அனுமதிப்பதாகவோ அல்லது பாதுகாப்பு அமைச்சகத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவோ அல்லது அவர்களது குடும்பங்களுக்குத் திரும்பவோ அனுமதிக்கப்படுவார்கள், என்று கூறியிருக்கிறார்.



## சிட்னியின் கார் தரிப்பிடத்தில் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் அங்காடியிலுள்ள கார் தரிப்பிடத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இந்தத் துப்பாக்கிச் சூடு நேற்று, உள்ளூர் நேரப்படி காலை 8.30 அளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர், 40 வயதுடையவர் எனவும் காரில் வைத்து அவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் குறித்து தெரியாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புற்றுநோய் சிகிச்சையில் அடுத்த முன்னேற்றம் தடுப்பூசிதான் - அமெரிக்க விஞ்ஞானிகள் தகவல்


அமெரிக்காவின் சியாட்டில் நகரை தலைமையிடமாக கொண்டு இயங்கும் அமெரிக்கத் தேசிய புற்றுநோய் மையம், புற்றுநோய்க்கு தடுப்பூசிகள் உட்பட பிற நோய் எதிர்ப்புச் சிகிச்சைகளை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு தற்போது இந்தத் தடுப்பூசிக்கான ஆராய்ச்சி மிகப்பெரிய திருப்புமுனையை எட்டியுள்ளதாக அது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டு வரும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சியாட்டில் தேசிய புற்றுநோய் மையத்தின் மூத்த விஞ்ஞானியான டொக்டர் ஜேம்ஸ் குல்லி கூறுகையில், புற்றுநோய் சிகிச்சையில் அடுத்த பெரிய முன்னேற்றம் தடுப்பூசியாக இருக்கும். பல ஆண்டுகளாக வரையறுக்கப்பட்ட வெற்றிக்குப் பிறகு, தடுப்பூசி சிகிச்சையை உருவாக்கும் ஆராய்ச்சியில் மிகப்பெரிய திருப்புமுனையை எட்டியுள்ளோம்.

அடுத்த 5 ஆண்டுகளில் புற்றுநோய் சிகிச்சைக்கான



தடுப்பூசிகள் வெளிவரலாம். இவை நோயைத் தடுக்கும் பாரம்பரியத் தடுப்பூசிகள் அல்ல. மாறாக, புற்றுநோய்க் கட்டிகளைச் சுருக்கவும், புற்றுநோய் மீண்டும் வராமல் தடுக்கவும் உதவும் தடுப்பூசிகளாக இருக்கும், என்று தெரிவித்திருக்கிறார்.



## லித்தியம் – அயன் மின்கலத்தை கண்டுபிடித்தவர் காலமானார்

லித்தியம்-அயன் மின்கலத்தைக் கண்டுபிடித்த ஜோன்குட் இனப், வயது மூப்பின் காரணமாக காலமானார். அவருக்கு வயது 100. 2019 இல் தன்னுடைய 97வது வயதில் லித்தியம்-அயன் மின்கலம் பற்றிய ஆய்வுகளுக்காக இவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.

1980 இல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது லித்தியம் - அயன் மின்கலத்தை ஜோன்குட் இனப் கண்டுபிடித்தார். 1922 இல் ஜெர்மனியில் பிறந்த ஜோன்குட் இனப் 2ஆம் உலகப்போரில் அமெரிக்காவின் வானிலை ஆய்வாளராகப் பணியாற்றினார்.

யேல் பல்கலைகழகத்தில் கணிதத்தில் பட்டம் பெற்ற ஜோன்குட், சிகாகோ பல்கலைகழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றவர். 2011 ஆம் ஆண்டு இவருக்கு அமெரிக்க அதிபராக இருந்த ஒபாமா அறிவியலுக்கான குடியரசுத் தலைவர் பதக்கத்தை வழங்கியிருந்தார்.

ஜோன்குட் இனப் கண்டுபிடித்த லித்தியம் மின்கலங்கள் டெஸ்லாவின் மின்சார வாகனங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன.

## உலகிலேயே அதிக காற்று மாசு கொண்ட நகரமாக கனடாவின் மொன்றியல் பதிவு



காட்டுத்தீயின் தாக்கம் காரணமாக உலகிலேயே அதிகமான காற்று மாசு கொண்ட நகரமாக கனடாவின் மொன்றியல் நகரம் பதிவாகியுள்ளது.

சுவிஸ்ஸர்லாந்தை சேர்ந்த ஐக்யு ஏயார் என்ற நிறுவனம், உலகளவில் காற்றின் தரம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு தரவுகளை வெளியிட்டு வருகின்றது. அந்த ஆய்வின்படி, கனடாவின் மொன்றியல் நகரில் உலகிலேயே மிக மோசமான அளவில் காற்று மாசுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனால், மொன்றியலில் புகழ் பெற்ற அயர்ன் மன் ட்ரையத்தான் போட்டி ரத்துச் செய்யப்பட்டதோடு, விளையாட்டுத் திடல்கள், நீச்சல் குளங்கள் போன்றவையும் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனிடையே, கனடாவில் காட்டுத்தீ ஏற்பட்ட இடங்களின் எண்ணிக்கையும் 465 ஆக உயர்ந்துள்ளது.

## சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை நிறுத்திய மியன்மர் இராணுவம்

மியன்மரில் ஏற்பட்ட வலிமையான மோச்சா சூறாவளியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி வழங்கலை அரசாங்கம் நிறுத்திய பின்னர், மக்கள் தமது வாழ்கையை மீண்டும் கட்டியெழுப்பப் போராடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மே 14 அன்று, மியன்மரின் பல பகுதிகளை மோச்சா சூறாவளி தாக்கியதையடுத்து, நூற்றுக்கணக்கானவர்கள் இறந்ததோடு,ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வழிகளில் அரசாங்கத்தினால் உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிலையில், தற்போது அந்த உதவிகள் குறைந்து வருவதால் பல குடும்பங்கள் அல்லலுறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போதிய குடிநீர், உணவு இல்லாமையால் பலர் பாதிக்கப்பட்டுள்ள



தோடு, பருவமழையும் தொடர்வதால் மக்கள் தினமும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர். மாணவர்கள் கூரைகள் அற்ற பாடசாலைகளில் கல்வி கற்கும் நிலையிலுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சேதமடைந்த வீடுகளில் ஒரு பகுதி மட்டுமே சரி செய்யப்பட்டுள்ளதாக ஐ.நாவின் மனிதாபிமான அலுவலகமும் குறிப்பிட்டுள்ளது.

சூறாவளித் தாக்கத்தால் 145 பேர் இறந்துள்ளதாக மியன்மர் இராணுவம் தெரிவிக்கும் அதேவேளை இறப்புக்களின் எண்ணிக்கை 500 ஐ நெருங்கியிருப்பதாக இராணுவ ஆட்சிக்கு எதிரான அமைப்புகள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை மியன்மர் இராணுவம் நிறுத்தியுள்ள நிலையில், மியன்மர் அரசாங்கம் வெளியில் இருந்து உதவிகளை அனுமதிக்க வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

# தமிழக காங்கிரஸ் தலைவராக யாரை நியமித்தாலும் மகிழ்ச்சி

## கே.எஸ். அழகிரி டெல்லியில் பேட்டி

தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரியின் பதவிக்காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து புதிய தலைவர் நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. இது தொடர்பாக காங்கிரஸ் தலைவர் கார்கே, ராகுல் காந்தி, வேணுகோபால் ஆகியோர் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

தலைவர் பதவிக்கு ஜோதிமணி எம்.பி., செல்லக்குமார் எம்.பி., கார்த்தி சிதம்பரம், முன்னாள் எம்.பி., பி.விசுவநாதன் ஆகியோர் தீவிரமாக முயற்சித்து வருகிறார்கள்.

டெல்லி சென்றுள்ள தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நேற்று இரவு அகில இந்தியத் தலைவர் கார்கேவை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின்போது அரசியல் நிலைவரங்கள் பற்றிப் பேசியதாகக் கூறப்படுகிறது.

அதையடுத்து டெல்லியில் தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி செய்தியாளர்களைச் சந்தித்திருந்தார். அப்போது அவர், தமிழக காங்கிரஸ் தலைவர் பதவிக்கு யாரை நியமித்தாலும் மகிழ்ச்சி தான். காங்கிரஸ் மாநிலத் தலைவராக எனக்கு உரிய பணியைச் செய்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழக அரசியல் தொடர்பாக காங்கிரஸின் தேசியத் தலைவர் கார்கேவுடன் ஆலோசனை நடத்தினேன்.

நான் பதவி கேட்டு காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்தது கிடையாது. பதவி கிடைத்த பின்னர், பதவியைத் தக்கவைக்கவும் தலைவர்களைச் சந்திப்பது கிடையாது. தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவராக நீடித்தாலும் மகிழ்ச்சி, வேறு ஒருவரை நியமித்தாலும் மகிழ்ச்சிதான். எனக்கு ஒரு பணி வழங்கப்பட்டால் அதை மகிழ்வுடன் செய்வேன்.

தமிழகத்தில் 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 72 வீத வெற்றியை காங்கிரஸ் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் அதிகமான எண்ணிக்கையில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. இன்றைக்கும் என்னுடைய



கருத்து எவ்வளவு தொகுதி பெறுகிறோம் என்பதல்ல. எவ்வளவு வெற்றி பெறுகிறோம் என்பதுதான். நான் பதவியில் இருந்தாலும் இல்லையென்றாலும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவேன், என்று கூறியுள்ளார்.

## கல்பாக்கம் அணு ஆராய்ச்சி மைய ரேடார் மாமல்லபுரக் கடற்கரையில் ஒதுங்கியது

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அணு ஆராய்ச்சி மையத்தின் பின்புறம் ஒரு கிலோ மீற்றர் தூரமுள்ள கடலில், படகுகள், கப்பல்கள் செல்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

அவ்வழியாகச் செல்லும் படகுகள், கப்பல்கள், சந்தேக நபர்களின் ஊடுருவல்களையும் மற்றும் சுனாமி, புயல் சின்னம், சூறாவளிக் காற்று போன்ற இயற்கைச் சீற்றங்களையும் கண்காணிக்க கல்பாக்கம் அணு ஆராய்ச்சி மையம் சார்பில் போயா என்ற ரேடார் கருவி சங்கிலியால் பிணைத்து அமைக்கப்பட்டு இருந்தது.

30 கிலோ மீற்றர் தூரம் வரை செல்லும் கப்பல்கள், படகுகளைக் கண்காணித்து, படம் பிடித்து அணு ஆராய்ச்சி மையத்தின் கட்டுப்பாட்டு அறைக்கு இந்த ரேடார் கருவி தகவல் அனுப்பும்.

இந்த நிலையில் கடந்த இரு தினங்களாக கல்பாக்கம் பகுதியில் பலத்த



கடல் சீற்றம் காரணமாக கடலில் அமைக்கப்பட்டு இருந்த போயா ரேடார் கருவியின் சங்கிலி அறுந்து கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. அந்த ரேடார் கருவி நேற்று மாமல்லபுரக் கடற்கரையில் கரை ஒதுங்கியது.

இதைக் கண்டு அதிர்ச்சி அந்த மாமல்லபுரம் மீனவர்கள் இது குறித்து பொலிசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலின்பேரில் அங்கு விரைந்த கடலோரக் காவல் படையினர், கரை ஒதுங்கிக் கிடந்த போயா ரேடார் கருவியை மீட்டு, அணு ஆராய்ச்சி நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

## அமைதியில் உண்மையிலேயே அக்கறையிருந்தால் மணிப்பூர் முதலமைச்சரை உடனே நீக்க வேண்டும்!

### பிரதமருக்கு மல்லிகார்ஜூன கார்கே கோரிக்கை

கடந்த மாதம் 3 ஆம் திகதி மணிப்பூரில் 'மெய்தி' பெரும்பான்மையின மக்களுக்கும், பழங்குடியினருக்கும் இடையே கலவரம் வெடித்தது. நூற்றுக்கும் மேற்பட்டோர் அதில் பலியானார்கள். இன்னும் கலவரம் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், இப்பிரச்சினை குறித்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஒருவழியாக, மணிப்பூர் நிலைவரம் குறித்து பிரதமர் மோடியுடன் மத்திய உள்துறை அமைச்சர்அமித்ஷா பேசியதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. கடந்த 55 நாட்களாக மணிப்பூர் பற்றி மோடி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. அவர் பேசுவதைக் கேட்க ஒவ்வொரு இந்தியனும் காத்துக்கொண்டிருக்கிறான்.

மணிப்பூர் மீது பிரதமர் மோடிக்கு உண்மையிலேயே அக்கறை இருந்தால், முதல் வேலையாக மணிப்பூர் முதலமைச்சர் பிரேன்சிங்கை அவர் நீக்க வேண்டும். மணிப்பூர் கலவரப் பிரச்சினையில், பா.ஜனதாவின் எத்தகைய பிரசாரமும் அதன் தோல்வியை மூடி மறைக்க முடியாது.

பயங்கரவாதிகள் மற்றும் சமூக விரோதிகளால் திருடப்பட்ட ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும். அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி, பொதுவான அரசியல் வழிமுறையைக் காண வேண்டும். பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் சாலை அடைப்பை நீக்க வேண்டும். தேசிய நெடுஞ்சாலையைத் திறந்து, அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கச் செய்ய வேண்டும். மறுவாழ்வுக்கான புதிய திட்டத்தை அறிவிக்க வேண்டும். என்று அவர் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## அனைத்து ஊழல்வாதிகளும் கைகோர்ப்பு இந்தியப் பிரதமர் மோடி போபாலில் உரை



ஒரு சில அரசியல் கட்சிகள் சுயநலன்களைத் திருப்திப்படுத்தும் அரசியல் செய்து, சமூக விரிசல்களை ஏற்படுத்துகின்றன, என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மத்தியப் பிரதேசத்தில் போபால் நகரில் இன்று நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பா.ஜ.க. தொண்டர்களிடையே இந்தியப் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் எதிர்க்கட்சிகளைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

உத்தரவாதம் என்ற ஒரு புதிய வார்த்தை இன்று பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், இந்த எதிர்க் கட்சிகளுக்கு உத்தரவாதங்கள் என்றால், ஊழல் என்று அர்த்தம். இந்தக் கட்சிகளின் ஊழலை நீங்கள் இணைத்தீர்கள் என்றால், அது 20 லட்சம் கோடியை விடக் கூடுதலாக இருக்கும், என அவர் சாடியுள்ளார்.

அவர் இந்த உரையின்போது, காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் பெயர்களைக் குறிப்பிட்டதுடன், அக்கட்சிகளின் தலைவர்கள் ஊழல் வழக்குகளில் குற்றவாளிகளாக உள்ளனர் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கட்சிகள் வழங்க கூடிய ஒரே உத்தரவாதம் என்பது ஊழலுக்கான உத்தரவாதமே ஆகும். இது போன்ற ஊழலை ஏற்று கொள்ள வேண்டுமா? என்று தற்போது நாட்டு மக்கள் முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் பேசியுள்ளார்.

நானும் இன்று ஓர் உத்தரவாதம் அளிக்கிறேன். ஊழலுக்கான உத்தரவாதம் அவர்களிடம் இருக்கு மென்றால், அதன்பின்னர், அனைத்து ஊழல்வாதிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற மோடியின் உத்தரவாதமும் இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஏழைகளிடம் கொள்ளையடிப்பவர்கள் கடுமையாக எதிர்கொள்ளப்படுவார்கள் எனக் கூறிய இந்தியப் பிரதமர் மோடி, பாட்னா கூட்டத்தில் அனைத்து ஊழல்வாதிகளும் கைகோர்த்தனர். ஊழல் தடுப்பு நடவடிக்கையில் இருந்து தப்பிக்க எதிர்க்கட்சிகள் முயற்சி செய்கின்றன. ஊழல் செய்தவர்கள் யாரையும் நான் விடமாட்டேன் எனவும், ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து விடுகிறார்கள் என்றும் மோடி பேசியுள்ளார்.

## மூன்று அதிகாரிகளை பணி நீக்கம் செய்தது பாகிஸ்தான் இராணுவம்

கடந்த மே மாதம் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற போராட்டங்கள் தொடர்பாக, மூத்த அதிகாரிகள் மூவரை பாகிஸ்தான் இராணுவம் பணி நீக்கம் செய்துள்ளது.



இராணுவச் சொத்துக்களைப்பாதுகாக்கத் தவறியமை தொடர்பில் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம்ரான் கான் ஊழல்குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பாகிஸ்தான் முழுவதும் அமைதியின்மை நிலவியது. இம்ரான் கானின் ஆதரவாளர்கள் பாகிஸ்தான் முழுவதும் போராட்டங்களை நடத்தியதில் ஏற்பட்ட மோதல்களில் எட்டுப்பேர் கொல்லப்பட்டனர்.

அதற்குப் பின்னர் 5,000 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, பின்னர் பெரும்பாலானோர் விடுவிக்கப்பட்டனர்.

அந்தப் போராட்டங்களை உரிய முறையில் கையாளத் தவறிய குற்றச்சாட்டில், பதினைந்து அதிகாரிகள் தண்டிக்கப்பட்டுள்ளதாகவும் மூவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.06.2023இல் வெளியிடப்பெற்றது.